[17th December 1959

MR. SPEAKER : The Speaker is not here to clarify. I am here to decide whether it is unparliamentary. It is not unparliamentary. The hon. Member can settle it with Srimathi Anandanayaki, who is an expert.

THE HON. SRI V. RAMAIAH : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் திருத்த மசோதாவின் முதலாவது கட்டத்தில் இல்லாத காரணத்தினால் இப்போது அவர்களுக்குப் பல சந்தேகம் உதித்திருக்கிறது. இந்த மசோதாவின் நோக்கமே இந்த ஸ்லம் பகுதிகளை இன்னும் அபிவிருத்தி செய்வதில் காலம் தாழ்த்திக்கொண்டிராமல் காலாகாலத்தில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுதான். ஆனால் அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் வேறு எத்தனையோ அரசாங்க இலாகாக்களோடு தொடர்பு கொண்டிருக்க முடியும். அவர்கள் சொல்கிற அத்தனை யோசனைகளையும் உடனடியாகத் தீர்ப்பது என்றால்கூட அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. செவிடன் காதில் ஊதின சங்குபோல இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பிரச்சினை அவ்வளவு சிக்கலாக, கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே இந்த மசோதாவுக்கு பொதுவாக எல்லோரும் ஆதரவு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் முக்கியமான நோக்கம் சீக்கிரத்தில் இந்த ஸ்லம்களை எல்லாம் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுதான். ஆகவே இதை எல்லோரும் ஆதரித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :

'That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill 1959, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1959 (L.A. BILL NO. 26 OF 1959).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959, be taken into consideration."

Sir, the Madras City Tenants' Protection Act, 1921, was enacted with the main object of safeguarding the tenants from eviction from residential quarters. Consistent with this object, it is proposed to restrict the application of the Act to residential buildings only and also to make all proceedings relating to non-residential buildings under the principal Act pending on the date of the first publication of amending Act, abate.

17th December 1959] [Sri M. A. Manickavelu]

This Act, as it now stands, also applies to tenancies of lands owned by local authorities. As it is considered necessary that the Act should not apply to tenancies of lands owned by the District Boards, Municipalities, Panchayats and the City Improvement Trust, it is proposed to amend the Act suittbly for the purpose.

There is at present no provision in the Act for an appeal against the orders passed by courts under sections 6, 7 and 7-A of the Act relating to fixing of reasonable rent by courts for occupation of land by a tenant. It has been proposed to make provision for appeal in the Act against these orders.

Incidentally it is proposed to change the expression " 2 annas " occurring in the Act into " twelve naye Paise " and also to make provision for enabling the Government to cancel a notification extending the Act to any municipal town or village issued by them under this Act, and if need be to re-issue such notification.

Sir, some hon. Members made some suggestions in regard to this Bill and they also expressed some difficulties in the practical working of it. The Hon. the Leader of the Opposition also has given notice of an amendment to refer this Bill to a select committee. I am amenable to his move. Since the Bill will go before a select committee, I hope hon. Members will pass the motion straightaway.

MR. SPEAKER : Motion moved :

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959, be taken into consideration."

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, there has been so much of agitation about the introduction of this Bill. That is why I made my submission to the Hon. Minister in charge to refer this Bill to a Select Committee. I have consulted the members of other parties also, and they also have agreed to the panel of names. So, I move—

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 26 of 1959), be referred to a Select Committee consisting of sixteen members of this House and that the following members be elected to serve on the Committee :—

The Hon. Sri M. A. Manickavelu

Sri C. R. Ramaswami.

,, P. G. Karuthiruman.

Srimathi T. N. Anandanayaki.

Sri S. Ramasami Naidu.

,, N. S. Sundararajan.

,, K. N. Palaniswami Gounder.

,, A. Y. S. Parisutha Nadar.

,, R. Srinivasa Iyer.

,, T. T. Daniel.

,, Sowdi S. Sundara Bharathi.

Sri K. Ramachandran.
,, K. Anbazhagan.
,, M. Kalyanasundaram.
,, P. S. Chinnadurai.
Dr. E. P. Mathuram. "

SRI M. KALYANASUNDARAM : I second the amendment, Sir.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

1-00 p.m. SRI M. KALYANASUNDARAM : இந்தத் திருத்த மசோதாவில் திருத்தவேண்டிய அம்சம் ஏதாவது இருந்தால் அது குடியிருப்பு மனைகள் அல்லாத பெரிய கடைகள், வியாபாரிகள் வைத்திருக்கக் கூடிய கிடங்குகள் இப்பேர்ப்பட்ட இடங்களுக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு கொடுக்கலாமே தவிர குடியிருப்பு மனைகள், சிறிய வெற்றிலைபாக்கு கடைகள் போன்றவைகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது. இப்பொழுது இருக்கக்கூடிய ரூபத்தில் நிறைவேறினால் முனிஸிப்பாலிட்டிக்கு சொந்தமான அல்லது ஜில்லா போர்டுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்று சொல்லி ஆயிரக்கணக்கான குடிசை வாழ்வோர் அப்புறப் படுத்தப் படுவார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் வேலைகளுக்கு குந்தகம் இல்லாமல் நடைபெற வேண்டும், அவர்களுக்கு தேவை யான இடங்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதை ஓரளவு ஒப்புக் கொண்டாலும் அதனால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வேறு பூமியாவது அளிக்கப்படவேண்டும். அல்லது அவர்களுக்கு ஓரளவு நஷ்டயீடாவது கொடுக்கப்பட வேண்டும். பல உதாரணங்கள் தெரியும் எனக்கு. இதுபற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து சில விஷயங் களில் ஸ்டே வாங்கியிருப்பது அவருக்கு தெரியும். மதுரை, திருச்சி நகரங்களில் முனிஸிப்பாலிட்டிகள் சிலயிடங்களை எடுத்துக் கொண்டு 40, 50 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த குடிசை வாழ் வோரை அங்கிருந்து அப்புறப்படுத்த முயற்சி எடுத்து வருவதை யும் அதைத் தடுத்து நிறுத்தியிருப்பதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஒருவேளை அவர்களை அப்புறப் படுத்திவிட்டு அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறதோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. முதலில் பேசும்போது சொன்னேன், ஐயனாவரத்தில் ஒரு பெரிய மனிதர்களிடமிருந்து 70 க்ரௌண்ட்கள் வாங்கப்பட்டது. அதில் குடியிருந்த மக்கள் எல்லோரும் அப்புறப் படுத்தப்பட்டுவிட்டார்கள் என்று. குடியிருப்பு மனைப் பாது காப்புச் சட்டத்தின் பலன் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்க்கு பாத்தியதைப் பட்ட இடங் களுக்கு இது பொருந்தாது என்று சொல்வதை நாம் ஆலோசித்து செய்யவேண்டும். நகரத்தை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டியது அவசியந்தான். ஆனால் அதன் பேரால் குடியிருப்பு

17th December 1959] [Sri M. Kalyanasundaram]

மனையை அபகரிக்காமல் இருக்கவேண்டும். அப்படி அபகரிக்க வேண்டியது சமுதாயத்தின் மொத்த நலனுக்கு அவசியம் என்பதை முன்னிட்டு ஏற்பட்டால் அவர்களுக்கு போதுமான நஷ்டயீடு கொடுக்கவேண்டும். அது, நிலவுடமைக்காரரோ அல்லது சர்க்காரோ கொடுக்கவேண்டும். இது செலக்ட் கமிட்டிக்கு போகயிருப்பதால் அங்கு இதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யலாம் என்றாலும் எந்த முறையில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதைப்பற்றி சில கருத்துக்கள் சொல்லவேண்டியிருப்பதால் இதைச் சொன்னேன்.

SRI N. K. PALANISAMI rose.

MR. SPEAKER : The Bill is going before the Select Committee. Does the hon. Member want to speak now?

SRI N. K. PALANISAMI : Yes, Sir.

MR. SPEAKER : All right. He may speak.

SRI N. K. PALANISAMI : இது, 1922-ம் வருடத்தில் இயற்றப் பட்ட சட்டம். 1955-ல் இதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப் பட்டது. முதலில் கொண்டுவந்த சட்டப் பிரகாரம் தனிப்பட்டவர் களின் பூமியானாலும் சரி அல்லது லோக்கல் போர்ட்ஸின் பூமி யானாலும் சரி அதில் வசிக்கக்கூடியவர்களை வெளியேற்றக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் இப்படி சட்டம் இருந்தபோதிலும் பல யிடங்களில், இன்றைய தினம் அதில் வசிக்கக்கூடியவர்கள் வெளி யேற்றப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக கோயம்புத்தூரில் உள்ளவர்கள் மழைபெய்து கஷ்டப்பட்டு கலெக்டரின் உதவியால் அவர்கள் ஒருயிடத்தில் வசித்து வந்தார்கள். குடிசைகள் எல்லாம் போட்ட பின் அவர்கள் அங்கு இருக்கக்கூடாது என்று சொல்லி அவர்கள் வெளியேற்றம் செய்யப்பட்டார்கள். திருப்பூரில், சேரி இருப்பது நகருக்கு அழகாயில்லை என்று சொல்லி அதை எடுக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருந்தபோதிலும் பல்யிடங்களிலும் வெளியேற்றப்படுகி றார்கள். சர்க்கார் சொல்வது தனிப்பட்டவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எவிக்ஷன் கூடாது, லோக்கல் போர்ட் சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து வெளியேற்றலாம் என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எந்தெந்த முனிஸிபாலிட்டிகள் அல்லது பஞ்சாயத்துக்கள் எல்லாம் இதன்கீழ் வரும் என்று சர்க்கார் நோட்டிபை செய்யலாம். அப்படி நோட்டிபை செய்த பிறகு அதை கான்ஸல் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் வேண்டு மென்று இந்த மசோதா கோருகிறது. இப்படியே இது பாஸாகு மானால் பெரிய நெருக்கடியானதொரு நிலை ஏற்படும். இதனால் ஏழை ஹரிஜனங்கள் கஷ்டப்படுவார்கள். ஆகவே, இந்தத் திருத் தத்தை செலக்ட் கமிட்டியில் வாபஸ் வாங்கி சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும்.

[17th December 1959

* THE HON. SRI M. A. MANICKAVELU : நான் முதலிலேயே சொன்னேன், இதில் சில கஷ்டங்கள் இருக்கிறது என்று. அதற்காகத்தான் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப ஒப்புக் கொண்டேன். முனிஸிப்பாலிட்டிகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். கோயம்புத்தூரில் வாட்டர் சப்ளை ஸ்கீம், ட்ரெயினேஜ் ஸ்கீம் இவைகள் இருந்தது, அவைகளை செய்ய முடியாமல் போய்விட்டது. ஆகவே, எதை எதை எப்படி எப்படிச் செய்யலாம் என்று ஆலோசித்து செய்யலாம், செலக்ட் கமிட்டியில். ஆகவே, கனம் அங்கத்தினர்கள் இதைப்பற்றி அதிகம் இப்போது பேச வேண்டியதில்லை.

MR. SPEAKER : I shall now put to vote the amendment of the hon. Leader of the Opposition as accepted by the Hon. Minister. The question is :

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 26 of 1959), be refered to a Select Committee consisting of sixteen members of this House and that the following Members be elected to serve on the Committee :—

1. The Hon. Sri M. A. Manickavelu.
2. Sri C. R. Ramaswami.
3. Sri P. G. Karuthiruman.
4. Srimathi T. N. Anandanayaki.
5. Sri S. Ramasami Naidu.
6. Sri N. S. Sundararajan.
7. Sri K. N. Palaniswami Gounder.
8. Sri A. Y. S. Parisutha Nadar.
9. Sri R. Srinivasa Iyer.
10. Sri T. T. Daniel.
11. Sri Sowdi S. Sundara Bharathi.
12. Sri K. Ramachandran.
13. Sri K. Anbazhagan.
14. Sri M. Kalyanasundaram.
15. Sri P. S. Chinnadurai.
16. Dr. E. P. Mathuram.

The motion was put and carried.

MR. SPEAKER : As this is only a Select Committee of this House, under rule 99 (1) of the Assembly Rules, I nominate Hon. Sri M. A. Manickavelu as Chairman of this Committee.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the House is not in a mood to proceed with the other items of business. So, I think the other items could be taken up at the next sitting of the House.

17th December 1959]

MR. SPEAKER : So, the Hon. Minister is not moving the other Bills now. All right. Thank you, gentleman. I now adjourned the House *sine die.*

The House then adjourned *sine die.*

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

B. Reports, notifications and other papers.

30. *The Madras Appropriation (No. 4) Bill*, 1959.

31. *The Madras Appropriation (No. 5) Bill*, 1959.

32. *The Press and Registration of Books (Madras Amendment) Bill*, 1959.

33. *Sixth Report of the Committee on Government Assurances.*

34. *Sixth Report of the Committee on Subordinate Legislation.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS